# நாஸர் தலைமையில புதிய மந்திரிசபை

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 9

நகைநற் வெட்டி எண் : 49
போன் 889

National Tamil Daily

இதழ் 129
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆனி 6 ரபி அவ். 11 செவ்வாய்க்கிழமை [20-6-67]

## கட்சித்தலைவர், அதிபர், பிரதமர் யாவுமே நாஸர்

கெய்ரோ, ஜூன் 19

ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாசர் தாமே பிரதம மந்திரியாகவும் பதவியேற்று புதிய மந்திரிசபையொன்றை அமைத்துக் கொள்ளவிருக்கிறார். பிரதமர் நாசர் தமது புதிய மந்திரிசபை பற்றிய விபரத்தை இன்றிரவு வெளியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய அரபுக் குடியரசின் ஆளும் கட்சியான சோஷலிஸ்ட் யூனியனின் தலைவராகவும் நாஸரே இருப்பார். தேசியப் போராட்டத்தின் இப்போதைய நிலையை வலுப்படுத்தவும் நாட்டின் சகல வசதிகளையும் ஒன்று திரட்டவுமே நாசர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அரசாங்க சார்புள்ள ''அல்அஹ்ரம்'' என்னும் பத்திரிகை தெரிவித்துள்ளது. இஸ்ரேல் - அரபு யுத்தத்தின் பின் நாசர் எடுத்துவரும் பல நடவடிக்கைகளிலும் மாற்றங்களிலும் புதிய மந்திரிசபை அமைப்பதும் ஒன்று.

செனட்சபையில்

# சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதா நிறைவேறியது

## செனட்டர் மாணிக்கம் எதிர்த்து வாக்களித்தார்

### பார்லிமெண்ட் கூட்டத் தொடர் நள்ளிரவுடன் முடிவு

கொழும்பு,, செவ்வாய்

**சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதா இன்று செனட்சபையில் மூன்றும் தடவையாகவும் நிறைவேறியது. சாதகமாக 16 பேரும், எதிர்த்து 9 பேரும் வாக்களித்தார்கள்.**

**மசோதாவின் இரண்டாவது வாசிப்பு 15 வாக்குகள் சாதகமாகவும் 14 வாக்குகள் பாதகமாகவும் பெற்று ஒரு வாக்கு வித்தியாசத்தில் நிறைவேறியது.**

மசோதா இரு சபைகளிலும் நிறைவேறிவிட்டதால் இன்றிரவே கவர்னர் ஜெனரலின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டு நாளை முதல் அமுலுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று நள்ளிரவு முதல் பார்லிமெண்டின் இப்போதைய கூட்டத்தொடர் முடிவடையும் என்றும் நம்பப்படுகிறது.

செனட்டர் மாணிக்கம் மசோதாவை எதிர்த்து வாக்களித்தார். அதேசமயம் எதிர்க்கட்சியினர் மசோதாவுக்குச் சமர்ப்பித்த சில பிரேரணைகளையும் அவர் எதிர்த்து வாக்களித்தார். செனட்டர் திலகரத்ன மசோதாவின் இரண்டாம் வாசிப்பில் எதிர்த்தும் மூன்றும் வாசிப்பில் ஆதரித்தும் வாக்களித்தார்.

எதிர்க்கட்சியினர் தாக்கல்செய்த எல்லா திருத்தப் பிரேரணைகளும் தோல்வியடைந்தன.

பிரதிநிதிகள் சபையின் எதிர்க்கட்சி தற்காலத்தலைவர் ஆர். ஜி. சேனநாயக, செனட்சபையின் கலரியில் காணப்பட்டார். மசோதாவுக்கு எதிராக அவர் ஆதரவு தேடியதாக அறியப்படுகின்றது.

2-ம் வாசிப்பின் போது மசோதாவை ஆதரித்து உள்ளூராட்சி மந்திரி செனட்டர் திருச்செல்வம் பேசுகையில் ஒப்பந்தத்தை முன்

[6-ம் பக்கம் பார்க்க]

## கோட்டை ஆலயத்தின் சாவியை அரசாங்க அதிபர் கையளித்தார்

### கிறிஸ்தவர்கள் தொடர்ந்து வழிபட ஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ்.

'யாழ்ப்பாணம் கிறிஸ்தவ சங்கத்திடம் கையளிக்கப்படும் இவ்வாலயம் நல்ல முறையில் தொடர்ந்து பரிபாலிக்கப்பட்டு வழிபாட்டிற்காக பயன்படுத்தப்படும் என நம்புகிறேன்.'

யாழ்ப்பாண கோட்டை ஆலயம் கையளிப்பு வைபவத்தில் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

ஆலயத்தின் சாவியை அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, கலாநிதி ச. குலேந்திரனிடம் ஒப்படைந்த பொழுது யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஐக்கிய சங்க சார்பில் அவர் ஏற்றுக் கொண்டார்.

அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசும் போது, 19-ம் நூற்றூண்டு, இவ்வாலயத்தை, புதைபொருளாராச்சி இலாகா பாரமெடுத்ததென்றும், இவ்வாலயத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு

[6-ம் பக்கம் பார்க்க]

## டாக்டரின் முதலாண்டு திதி

இன்று நடைபெறும் காலஞ் சென்ற வைத்திய கலாநிதி க. சி. சண்முகரத்தினத்தின் முதல் ஆண்டுத் திவஷத்தையொட்டி மாலை 4-30 மணிக்கு சிவன் கோவில் மேற்கு வீதி ஞான வைரவர் கோவிலில் விசேட பூசையும், ஆராதனையும் மாலை 5-30 மணிக்குவண்ணை வைத்தீஸ்வரன் கோவில் மகா மண்டபத்தில் நல்லை திருஞான சம்பந்தர் மடத்து ஆதீனகர்த்தா ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரானின் கலாக்ஷேபமும் பஜனையும், ஆதீனமாணவிகளின்கூட்டுப் பிராத்தனையும் நடைபெறும்.

## மீன்பிடி அபிவிருத்திக்கு முக்கியத்துவமளிக்கப்படும்

—அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம்,செவ்.

யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு இனிமேல் பத்திரிகைநிருபர்களுக்கு அழைப்பு அனுப்பப்படுமென்றும் அவர்கள் கூட்டத்தில் சமுகம் கொடுக்க அனுமதிக்கப்படுவார்களென்றும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு.வேர்ணன்அபயசேகரா நேற்றுக் காலை தெரிவித்தார் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டிலேயே திரு. வேர்ணன் அபயசேகரா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டங்கள், விவசாய அபிவிருத்திக்கூட்டங்கள், தமிழ் பொலிஸ் ஊழியர்கள் நியமனம் ஆகியனபற்றி அரசாங்க அதிபர் இம்மகாநாட்டில் விளக்கம் கொடுத்தார். மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு பத்திரிகை நிருபர்கள் அனுமதிக்கப்படுவதை கூட்டத்தில் கலந்து கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்க மாட்டார்களா என்று நிருபர் ஒருவர் அரசாங்க அதிபரைக் கேட்டபோது [illegible] அனுமதித்தால் அவர்கள் எதிர்ப்பதில் அர்த்தமில்லை என அவர் பதிலளித்தார்.

இன்று நாட்டில் விவசாய

[6-ம் பக்கம் பார்க்க]

## வல்வை இராணுவ முகாம் பலாலிக்கு இடம்மாறும்?

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறையிலிருந்துவரும் இராணுவ முகாமை பலாலிக்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக அறியப்படுகிறது.

வல்வெட்டித்துறையில் தற்பொழுது இருந்துவரும் பொலிஸ் நிலையத்தை இப்போது இராணுவ முகாம் அமைந்திருக்கும் இடத்துக்கு மாற்றம் செய்து பொலிசாரின் தொகையை அதிகரிக்கச்செய்தும் இரண்டாவது தரத்துக்கு இதன் அந்தஸ்தை உயர்த்தி தொண்டமானாறு, ஊறணி ஆகிய இடங்களில் கிளை பொலிஸ் நிலையங்களைத் திறக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத்தெரியவருகிறது.

தற்பொழுது இப்பகுதி கரையோரங்களில் இராணுவத்தினருக்குப் பதிலாக பொலிஸாரே ரோந்து சுற்றி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## புகார் செய்ய சென்றவரை தூஷித்தாராம் அதிகாரி

சங்கானை, திங்கள்

வலிமேற்கு பஸ்நிலையத்திற்குபுகார்செய்யச் சென்ற பிரயாணி, பஸ் நிலையப் பொறுப் பதிகாரியாலும், பஸ் பரிசோதகராலும், கேவலமான வார்த்தைகளால் இன்று காலை தூஷிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சங்கானை கிழக்கைச் சேர்ந்த ராஜலிங்கம் என்பவர் புகார் செய்வதற்காக காரியாலயத்தில் புகார்ப் புத்தகம் கேட்டதைத் தொடர்ந்து மேற்கண்ட சம்பவம் நடந்ததாம்.

பஸ்நிலையத்தில் புகார்ப் புத்தகம் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அப்பிரயாணி வேறுதாளில் புகார் எழுதிக் கொடுத்தபோது பொறுப்பதிகாரி ஏற்க மறுத்ததாகவும், அவரைத் தகாதவார்த்தைகளால் பேசித் தாக்க முயற்சித்ததாகவும் தெரியவருகிறது.

இச்சம்பவம்பற்றி சம்பந்தப்பட்ட பிரயாணி பொலிஸில் புகார்செய்ததோடு, தேசிய சேவை மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா, இலங்கை போக்குவரத்துச்சபை தலைவர் திரு. ஆர். ரி. டி. சில்வா ஆகியோருக்கும் தந்திமூலம் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உங்கள் எதிர்காலத்தைப்பற்றி கவலைப்படவே கூடாது. எல்லாவற்றையும் பூரணமாக இறைவனிடம் ஒப்புவித்து விடுங்கள். கடவுளிடம் பூரண சரணாகதியடைந்ததற்கு இது ஓர் அடையாளம். பச்சைக் குழந்தைதாயின்கையில் எப்படி தன்னைப்பற்றி எவ்வித கவலையுமற்றிருக்கிறதோ, அது போலவே, கணத்துக்குக் கணம் நாம் வாழவேண்டும்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹூ
ஆனி 6 மீ௨ (20-6-67)

## பிரயாணிகள் கஷ்டம்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேரும் ரயில்கள் சென்ற சில தினங்களாக குறித்த நேரத்தைவிட பலமணி நேரம் தாமதித்து வந்து சேர்கின்றன. ஒன்றிரண்டு தடவை எதிர்பாராதவிதமாக தாமதம் ஏற்படலாம். இதுதவிர்க்க முடியாததாகவும் இருக்கலாம் ஆனால் சில தினங்கள் தொடர்ந்து ரயில்கள் தாமதமாக வருவது பிரயாணிகளான பொது மக்களுக்குவீண்கஷ்டமும ரயில் இலாகாவின் பெயருக்கு இழுக்கும் ஏற்படுவதாகும்.

புதிய ரயில் பெட்டிகளை வெளிநாடுகளிலிருந்து விலைக்கோ, கடனாகவோ, நன்கொடையாகவோ பெற்றாலும், ரயில் நிலையங்களை நவீன முறையில் அழகாக அமைத்தாலும் போதாது. ரயில்கள் குறித்தநேரத்துக்குப் புறப்பட்டு உரியநேரத்துக்குப்போய்ச்சேரவேண்டிய இடத்துக்குச்சேர வேண்டும். இதில்தான் ரயில் இலாகாவின் நற்பெயரும், பெருமையும் வருமானமும் தங்கியிருக்கிறது. சென்றசிலதினங்களாக ரயில்கள் இங்கு தாமதமாக வந்து சேர்வதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகிறது. இவற்றில் ஒன்று என்ஜின் கோளாறு என்பதாகும். ஒருநாள் ஒரு ரயிலுக்கு என்ஜின் கோளாறு ஏற்பட்டிருக்கலாம். எல்லா நாட்களுமே இந்தக் கோளாறுதானா? என்ஜின் கோளாறு தொடர்ந்து ஏற்படுவதற்குஎன்ன காரணம்? நல்ல நிலையிலுள்ள ரயில் என்ஜின்கள் இங்கு இல்லையா? என்ஜின்களை சரிபார்த்து அவற்றில் நம்பி பாதுகாப்பாகப் பிரயாணம் செய்யலாமா என்று உறுதி கூறக்கூடிய தகுந்த நமது ரயில் இலாகாவிலுள்ள பொறியியல் வல்லுனர்களுக்கும் நிபுணர்களுக்கும் இல்லையா? பிரயாணம் கஷ்டமின்றியும் வீண் நஷ்டமின்றியும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும். இல்லையேல் ரயில்வேபகுதி தொடர்ந்து நஷ்டமடைவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

நேற்று முன் தினமும் அதற்கு முதல் நாளும் கொழும்பில் நண்பகலுக்குச் சற்றுப்பின்னர் புறப்பட்ட ரயில்கள் யாழ்ப்பாணத்துக்கு மறுநாள் அதிகாலை மூன்று மணியளவில்தான் வந்து சேர்ந்தன. அந்தச்சமயத்தில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திலிருந்து இதர பகுதிகளுக்குச்செல்வதற்கு பஸ் வசதிகள் எதுவும்இல்லை. ரயில் நிலையங்களில்உள்ள தனிப்பட்ட கார்களும், வாடகைக் கார்களும் இதுபோன்றசந்தர்ப்பங்களில் எப்படி நடந்து கொள்ளுமென்பது தெரிந்ததே. அகால வேளையில் ரயில்நிலையத்தில் பிரயாணிகளுக்கு பாதுகாப்போ, உதவியோ அளிப்பதற்குப் பொலிசார்கூட காணப்படுவதில்லை. ரயில்கள் தாமதமாவதன்மூலம் களைத்துச்சோர்ந்து கஷ்டமுற்றுவரும் பிரயாணிகளுக்கு ரயில் நிலையத்திலும் வீண் தொல்லைகளும் சோதனைகளும் ஏற்பட வேண்டுமா?

# ஓர் உத்தம புருஷன்

— எஸ். சிவசுப்பிரமணியம், புரக்டர், கொழும்பு. —

ஈழத்தாய் ஈன்றெடுத்த பொதுநலப் பற்றுமிக்க அன்புக்குரிய ஒரு மைந்தன் எம்மை விட்டுப் பிரிந்து இன்றுடன் ஒரு வருடம் முடிகிறது. மிக இளம் வயதில் அமரத்துவம் எய்தி எண்ணற்ற மக்களைத் துக்கசாகரத்தில் வீழ்த்திய டாக்டர் க. சி. சண்முகரத்தினத்தையே குறிப்பிடுகிறேன். டாக்டர் அவர்கள் இச்சந்ததியில் உதித்த ஓர் உத்தம புருஷன். வெளியில் காட்டிக்கொள்ளாமல் பணிவான பற்றுதலோடு சேவை புரிந்த அன்னாரின் குணாதிசயங்களைக் கண்டு பொதுமக்கள் அவர்மீது அன்பு சொரிந்தனர். பின்னணியிலிருந்துகொண்டே அவர் செய்த மௌனத்தொண்டு எமக்கெல்லாம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவிளங்குகிறது. சந்ததி சந்ததியாக மக்களின் நன்மதிப்புக்குஇலக்காகிய ஒரு சீரிய குடும்பத்தில் பிறந்து தமிழ்ப் பண்புக்கும் நாகரீகத்துக்கும் சின்னமாக விளங்கினார். அவரிடம் உடன்பிறந்த அடக்கமான குணத்தின் பலனாக அவரது குணம், நடை, சேவை, முதலியவற்றை நாம் சரியாக அறிந்துகொள்ளமுடியவில்லை என்றும் கூறலாம்.

டாக்டர் அவர்கள் 44 வயதாயிருக்கும்போதே திடீரென்று இறைவன் அவரை அழைத்துக்கொண்டார். இந்தச் சொற்பகால சீவியத்துக்குள் அவர் மக்களுக்கு மதிப்பிடற்கரிய தொண்டுகள் பல செய்துவிட்டார். வாழையடி வாழையாக ஆற்றல் மிக்க வைத்தியர்கள் என்று கௌரவிக்கப்பட்ட ஒரு குடும்பத்தில் வந்த டாக்டர் அவர்கள் தாமும் ஒரு பிரசித்தமான வைத்தியராக இருந்தார். சிறந்த வைத்தியர் என்று பெயர் எடுத்ததோடல்லாமல், தம்மிடம் வரும் நோயாளிகளிடத்தும் அவர் அன்போடும் நியாயமாகவும் நடந்துகொண்டார். அவர் பணத்தைப்பற்றி எப்பொழுதுமே அக்கறை கொண்டதில்லை. நோயைக் குணப்படுத்துவதும், நோயாளிகளைத் திருப்திப்படுத்துவதுமே அவருடைய பிரதானமான லட்சியங்கள். இந்தத் தர்மசிந்தனையான கொள்கையால் அவர் ஏராளமான பணத்தை இழந்தார். ஆனால் அதன்மூலம் ஆத்மதிருப்தி பெற்று சமுதாயத்தின் பெரு மதிப்புக்கும் ஆளானார்.

தாமே ஒரு சிறந்த வைத்தியனாக விளங்கியதோடு, ஆயுள்வேத வைத்தியமுறைகளை விருத்தி செய்வதிலும் பெரிதும் ஆர்வம் காட்டினார். சொந்தத் தியாகங்கள் பல செய்து ஓர் ஆயுள் வேத வைத்தியசாலையையும் மருந்துச்சாலையையும் நிறுவினார். யாழ்ப்பாணத்திலுள்ள இந்த நிறுவனங்களின் சிறப்பை சாதாரண மக்கள் எளிதில் உணர்ந்துகொள்ள முடியாது. தமிழ்பேசும் மக்களுக்கு அவர் ஒரு பெரும் நன்கொடையை விட்டுவிட்டுப் போயிருக்கிறார்.

வைத்திய சேவைகள் ஒரு புறமிருக்க, டாக்டர் சண்முகரத்தினம்அவர்கள் தமது தமயனார் திரு. க. சி. தங்கராசாவுடன் கூடி 'ஈழநாடு' பத்திரிகாலயத்தை ஸ்தாபித்து இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கு மகத்தான சேவை செய்திருக்கிறார் தமிழ்பேசும் பகுதியில இப்படி ஒரு தமிழ்த் தினசரியை நிறுவியது ஒரு தமிழனால் இந்நாட்டுக்கு செய்யக்கூடிய மதிப்பற்ற தொண்டாகும். கொழும்பைத் தவிர இலங்கையிலுள்ள வேறெந்தப் பட்டினத்திலாவது எந்த மொழியிலாவது ஒரு தினசரிப் பத்திரிகை இதுவரை வெளிவந்ததில்லை யென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வட பகுதி மக்களின் கல்வியறிவு பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றை 'ஈழநாடு' சிறப்புடன் பிரதிபலிக்கிறது.

டாக்டரின் பொதுச் சேவைகள் யாவும் அவர் சென்னையில் ஒரு மாணவராயிருந்து இந்திய சுதந்திரப் போரில் ஈடுபட்டு சிறை [illegible] ளத்தில் மூன்று விட்டுவிட்டன! இந்த அரிய சம்பவம் இந்தியாவில் நடந்தமையாலும், டாக்டர் அவர்கள் தம்மைப் பற்றி அதிகம் பறைசாற்றிக் கொள்ள விரும்பாதவர் ஆதலினாலும், இங்குள்ள பலர் அதைக் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள்.

இப்பேர்ப்பட்ட தேசாபிமானியின் குண விசேஷங்களை தமது பக்தியாலும் நற்குணங்களாலும் உருவாக்கிய அன்னாரின் அன்னையின் நினைவு எனக்கு இச் சமயத்தில் வருகிறது. அத்துடன் அவருடைய தாய் மாமனாராகிய ஸ்ரீலஸ்ரீ இலக்கண சுவாமிகள் [முத்துக்குமாரசுவாமி தம்பிரான்] அவர்களின் நினைவும் என் மனதில் எழுகின்றது. இப்பெரியார் இலங்கையிலும் இந்தியாவிலும அக்காலத்தில் ஒரு பெரும் தமிழர் எனப் போற்றப்பட்டு சிதம்பரத்தில் சமாதி அடைந்தார் பல இந்திய அறிஞர்களும் பக்தர்களும் அவர் காலடியிலிருந்து உபதேசம் பெற்று பெருமை அடைந்னர். சைவ சித்தாந்த செம்மலாகிய ஸ்ரீஈசான சிவாச்சாரியார் அவர்கள் சுவாமிகளைப்பற்றி வியந்து பேசுவதை கேட்கும் பாக்கியம் எனக்கு கிடைத்திருக்கிறது. ஸ்ரீலஸ்ரீ இலக்கண சுவாமிகளைப் பற்றியும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைப் பற்றியும் அவர் பேசும்போது குரலைத் தாழ்த்தி மிகவும் விநயத்தோடும் பக்தியோடும் பேசுவார். தமிழுக்கும் சைவத்துக்கும் அவர்கள் மூலம் பெரும் சேவை செய்த யாழ்ப்பாணம் ஒரு

[6-ம் பக்கம் பார்க்க]



## லெஸ்லியின் இரங்கற் செய்தி

''நண்பன் 'சண்', மாணவனாக மதராசில் இருந்த காலம் முதல் உலக அரசியலிலும் நம் தாயகத்தின் அரசியலிலும் அக்கறை காட்டியதுமல்லாமல் சோஷலிஸப் பாதையின் மூலமே எமது பிரச்னைகட்குத் தீர்வு காணலாம் என உணர்ந்திருந்தார். அவர் தன்வாழ்நாளில் எமது இயக்கத்தில் சேர்ந்து உழையாவிடினும் அவருக்கும் எமக்குமிடையே எக்காலத்திலும நெருங்கிய தொடர்பு இருந்தது மொழிப்பிரச்னை நம் நாட்டவரை பிளவுபடுத்திய பொழுதும் அதை இன அடிப்படையில் பிளவு படுத்தலாகாது என்ற எண்ணத்தைக் கடைசி நிமிடம் வரை கடைப்பிடித்திருந்தார். எமது கட்சியின் கொள்கைக்கும் அவரது கொள்கைக்குமிடையே ஒரு சில வேறுபாடுகள் இருந்தபொழுதும் அவர் எமது அரசியல் நோக்கத்தையும் கொள்கையையும் உணர்ந்தார். நாம் அவரது அபிப்பிராயங்களை மதித்தோம்.

அவர் ஓர் அரசியல்வாதி மட்டுமல்ல, ஆயுள்வேத வைத்தியரும் கூட. அவர் சித்தியால் கற்றறிந்ததையும் தனது பரம்பரை முறையையும் நன்கு இணைத்து சிகிச்சை அளித்தார். அவரது சாந்த குணமும், புன்சிரிப்பும், அமைதியும் ஆழ்ந்த அறிவும் எவராலும் மெச்சத்தகுந்ததே. அவர் என்னிலும் இளையவர். இருப்பினும் அவரது சடுதியான மறைவு. தமிழ் மக்கள் மத்தியில் வாழ்ந்த சோஷலிஸ வாதியையும் சிறந்த வைத்தியரையும் இழக்கச் செய்துவிட்டது.

அவரது எண்ணக் கருத்துகள் நிலைக்க.

இப்படிக்கு
[ஒப்பம்] லெஸ்லிகுணவர்த்தன,
எம். பி; பாணந்துறை.

# ஐயாறன் எழுதுகிறார்

'இத்தனை நாள் ஆனபின்பும் ஏழை நெஞ்சே ஏன் துயரம்? - எத்தனைதான் அழுதாலும உத்தமர் தான் வருவாரோ?'

இன்றுடன் ஒரு வருடமாகின்றது டாக்டர் சண்முகரத்னம் நம்மை விட்டுப்பிரிந்து. அவர்காட்டிய அன்பை அடிக்கடி நினைந்து நினைந்து உள்ளம் உருகும். கண்களில் நீர்பனிக்கும். யாரிடமாவது இதைப் பற்றிச் சொன்னால், அவரும் நம்முடன் சேர்ந்து தமக்குக்காட்டிய அன்பைச் சொல்லி வருந்துகிறார். ஆறுதலுக்கு வேறென்ன வழி?

ஃ ஃ ஃ

வாழ்க்கையிலே எவ்வளவோபேரை சந்திக்கிறோம். உறவு சொள்ளுகிறோம். ஆனால் ஒரு சிலரைக் குறித்துத்தான நெஞ்சு நினைத்து நினைத்து உருகுகின்றது. ஏன்? உண்மையான அன்பைத்தான் நம் உள்ளம் தேடி அலைகிறது. அன்புகாட்டப் பணம் காசு தேவையில்லை. உள்ளத்திருந்துவரும் ஒரு புன்னகையும் போதும். அதை நம்நெஞ்சு என்றும் மறப்பதில்லை. காந்தி அடிகள், சுவாமி ராமதாஸ் இவர்கள் போன்றவரின் உண்மையான புன்னகை உலகிலே எவ்வளவு லட்சக்கணக்கான மக்களுக்கு ஆறுதல் அளித்து, புதுவாழ்வு மலரச்செய்துள்ளது!

என்பால் டாக்டர் காட்டிய பலபல அன்புச் செயல்களும் இப்போது அடுக்கடுக்காக நினைப்பு வருகின்றன. ஒரு சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிட உள்ளம் தூண்டுகின்றது.

ஃ ஃ ஃ

அன்று தமிழ் புதுவருடப் பிறப்பு. வழமையாககோப்பி பலகாரம் அனுப்பும் கடைக்கு விடுமுறை. இது எனக்குத்தெரியாது. ஆக்கைக்கு இரைதேடி வெகுதூரம் செல்லவும் மனமில்லை. கருப்பைக்குள் முட்டைக்கும், கல்லினுட் தேரைக்கும் அமுதளிக்கும் அண்ணல் என்ன தான் செய்கிறார் பார்க்கலாம் என்று படுத்து பசியால், சற்றே கண்ணயர்ந்து விட்டேன். சுமார் ஒரு மணி நேரத்துக்குப்பின் கண்விழித்தேன். நம்பமுடியவில்லை பக்கத்தில் மேடைமீது கனி வகைகளும், காய்ச்சிய பாலும் யாரோ வைத்திருந்தார்கள். கடவுள் கருணையுள்ளவர்தான்என்று நெஞ்சுக்கு உறுதி ஏற்பட்டது. யார் இதைக் கொண்டு வைத்ததென்பதைப் பற்றி சிந்திக்காமல், பசியாறினேன்.

இரண்டு நாட்களுக்குப் பின் இதைப்பற்றி டாக்டரிடம் குறிப்பிட்டு, அவர்தான் வைத்ததா என்று கேட்டேன். அடக்கத்துடன் புன்முறுவல் பூத்தார். வேறு ஒரு வார்த்தையும் சொல்லவில்லை என்ன அன்பு. என்ன பண்பு!

ஃ ஃ ஃ

சூறுவளி கஷ்டநிவாரணத்துக்காக, உருத்திரபுரத்திலுள்ள காந்தீ சேவா சங்கஅனாதை விடுதிக்குச் சென்றோம். விடுதியின் மேற்கூரையெல்லாம் புயலில் சேதமடைந்திருந்தது. அங்கு சமையல் கட்டுக்குச் சென்றோம். பிள்ளைகள் சாப்பிடும் அலுமினியத்தட்டுகள் மிகப் பழமையாக இருந்தன. அவற்றை டாக்டரிடம காட்டினேன். அவர் ஒன்றும்பேசவில்லை. ஆனால் யாழ்ப்பாணம்திரும்பியதும் பல புதுத் தட்டுகளை வாங்கி அங்கு தம் சொந்த செலவில் அனுப்பி வைத்தார். அவர் செய்த இதுபோன்ற அன்புப் பணி, மற்றவர்களுக்குத் தெரி

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய தூதரக முற்றுகையை நிறுத்துமாறு சீனவுக்கு இந்தியா கடும் எச்சரிக்கை

## விளைவுகளுக்கு சீனவே பொறுப்பாகும்

புதுடில்லி, ஜூன் 19

**சீனவிலுள்ள இந்தியத் தூதரகத்தின் முற்றுகையை இன்று மாலை 3 மணிக்கிடையில் நிறுத்தவேண்டுமென்றும், அப்படி இல்லையேல் தகுந்த மாற்று நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ள வேண்டியேற்படுமென்றும் இந்தியா நேற்றுச் சீனவிடம் கடுமையான எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.**

சீனவிலுள்ள இந்தியத் தூதரகம் நேற்று இரண்டாவது நாளாக முற்றுகையிடப்பட்டதுடன், தூதரகக் காரியாலயத்தினுள் கதவடைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் அவர்களது குடும்பத்தினரும் வெளியுலகுடன் தொடர்பு கொள்ள முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளனர்.

முற்றுகையைக் கைவிடுமாறும், இந்தியத் தூதரகச் சிப்பந்திகள் தூதரக நடவடிக்கைகளில் வழக்கம் போல் இயங்குவதற்கான சகலவசதிகளையும் இன்று மாலை 3 மணிக்குள் அளிக்குமாறும் இந்தியா சீனவிடம் கூறியுள்ளது- அல்லாவிடில், அதனுல் வரக்கூடிய விளைவுகளுக்குச் சீன அரசாங்கமே பொறுப்பாளியாகும் என இந்தியா எச்சரித்துள்ளது

நேற்றுப் பிற்பகல் இந்தியாவிலுள்ள சீனத் தூதுவர் இந்திய வெளிவிவகார இலாகாவுக்கு வருமாறு பணிக்கப்பட்டார். அங்கு அவர் சென்றதும், மேற்படி எச்சரிக்கை அடங்கிய ஆட்சேபக் குறிப்பை இந்தியா அவரிடம் கையளித்தது. குறிப்பைவாங்கிப்படித்த சீனத் தூதுவர், சீன மொழியில் அவசர அவசரமாகத் தமது சொந்தக் குறிப்புகள் சிலவற்றை எழுதினர். ஆனுல், அவர் அவற்றை, அங்கேயே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்.

## 'பீகிங் அரசாங்கமே காலிகளை தூண்டியுள்ளது'

சீனவிடம் இந்தியா சமர்ப்பித்த ஆட்சேபக் குறிப்பில், பீகிங் அரசாங்கத்தின் தூண்டுதலிலேயே காலிகள் இந்தியத் தூதரகத்தை முற்றுகையிட்டுள்ளதென்பது வெளிப்படை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பீகிங் அரசாங்கத்தின் இந்த நடத்தை, முன்னைய சீன ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் நடந்தவற்றையே நினைவூட்டுவதாகவும் அக்குறிப்பு மேலும் கூறியது.

இந்தியத் தூதரகம் முற்றுகையிடப்பட்டுள்ளதை யிட்டு, இந்திய அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் நேற்று ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தார். தூதரகச் சிப்பந்திகளிடம் உள்ள பொருட்கள் அதிக நாளைக்கு நீடிக்கப் போதுமானவையல்லவென அவர் கூறினர்.

### இரண்டாவது நாளாக முற்றுகை

இந்தியத் தூதரகம் நேற்று, இரண்டாவது தினமாகச் செங்காவலரினுல் முற்றுகையிடப்பட்டது. தூதரகத்தின் இரு நுழைவாயில்களும் அவர்களால் அடைக்கப்பட்டிருந்தன. தூதரகத்தை நோக்கிவந்த கார்களைச் செங்காவலர் திருப்பி அனுப்பிவிட்டனர். தூதரகத்தினுள் செல்ல, மேற்கு நாடுகளின் பிரதிநிதிகள் அனுமதி மறுக்கப்பட்டனர்.

பீகிங்கிலிருந்து வரும் செய்திகள், ஆயிரக்கணக்கான செங்காவலர் இந்தியத் தூதரகத்தைச் சுற்றிவளைத்து நிற்பதாகவும், இந்தியாவுக்கு எதிரான கோஷங்களைக் கிளப்புவதாகவும், துணிவிருந்தால் கட்டிடத்தைவிட்டு வெளியே வருமாறு தூதரக அதிகாரிகளிடம் சவால் விட்டதாகவும் கூறுகின்றன.

நேற்று முன்தினம் இந்தியாவிலுள்ள சீனத்தூதரகத்தின் முன்னுல் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது காயமடைந்து, வெலிங்டன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 7 சீனத் தூதரகச் சிப்பந்திகளில் நால்வர் 'டிக்கெட்' வெட்டப்பட்டு அனுப்பப்பட்டனர். அவர்கள் இப்போது குணமாகிவிட்டதாகவும், திருப்தியான உடல் நிலையிலுள்ளதாகவும் ஆஸ்பத்திரி நிர்வாகிகள் அறிவித்தனர்.

### சீனவின கோரிக்கை

இந்தியாவினுல் நாடுகடத்தப்பட்ட தனது பிரதிநிதிகளைச் சீனவுக்குத் திருப்பியழைக்கப் புதுடில்லிக்கு விமானமனுப்ப பீகிங் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இம்முடிவை இந்திய அரசாங்கத்துக்கு அறிவித்து, சீன விமானங்கள் வந்திறங்க அனுமதி தருமாறு சீன அரசாங்கம் இந்தியாவிடம் கோரியுள்ளது.

முன்னதாக அறிவிக்கப்பட்டதுபோல், இந்தியா வந்துள்ள இந்தியப் பிரதிநிதி திரு. ரகுநாத், தமக்குச் சீனவில் ஏற்பட்ட அனுபங்களை நேற்றுப் பத்திரிகையாளரிடம் விபரமாகக் கூறினர்.

அவருடன்சம்பந்தப்பட்ட மற்ற இந்திய அதிகாரியான திரு. விஜய், நாளை இந்தியாவந்தடைவார்.

### இந்திரா—ரகுநாத் சந்திப்பு

திரு. ரகுநாத் நேற்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து, நிலைமையை விளக்கிக் கூறினர். இந்தியத் தூதரகச் சிப்பந்திகள் உற்சாக நிலையிலிருப்பதாக அவர் பிரதமரிடம் தெரிவித்தார்.

### நேப்பாள சம்பவம்

நேப்பாளத்தில், கத்மாண்டு விமானநிலையத்தில், நேற்று முன்தினம், சில சீனத் தூதரக அதிகாரிகள், அங்கு தமது சகாக்கள் சிலரை வரவேற்கச் சென்றிருந்த போது, இந்திய எதிர்ப்புக் கோஷங்களைச் சப்தமிட்டதாக அறிவிக்கப்பட்டது. இச்சம்பவத்தையிட்டு இந்தியா நேப்பாள அரசாங்கத்திடம் ஆட்சேபம் தெரிவித்தது

இதற்குப்பதிலளிக்கையில், சீன அதிகாரிகளின் [illegible] முற்றிலும் எதிர்பாராததொன்றென்றும், தங்களையே ஆச்சரியத்துக்குள்ளாக்கி விட்டிருப்பதாகவும் நேபாள அரசாங்கம் குறிப்பிட்டுள்ளதுடன், இனிமேலும் இத்தகைய சம்பவங்கள் நடைபெருத வண்ணம் பார்த்துக்கொள்வதாகவும் நேபாளம் இந்தியாவிடம் உறுதியளித்துள்ளது.

### வேலை அனுபவதின விழா

சங்கானை, திங்கள்

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் வேலை அனுபவதின விழாக் கொண்டாடப்பட்டது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னைநாள் அதிபர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேச்சாளர்களாக வலி-மேற்குக் காரியாதிகாரி திரு. என். மாணிக்கநடராசா வித்துவான் திரு. சி. ஆறுமுகம் ஆகியோர் உரையாற்றினர். கல்வி அதிகாரி திரு. இராசா விழாவை ஆரம்பித்துவைத்தார்.

## ஐ. நா. பொதுச் சபையில் கொஸிஜின் முதலில் பேசுகிறர்

### ஜோன்சனையும் சந்திக்கலாம்

### சிரியா போர் நிறுத்தத்தை மீறியதாக இஸ்ரேல் புகார்

நியுயோர்க், ஜூன் 19

இன்று மாலைநடைபெறவிருக்கும் மேற்குஆசிய விவகாரம்பற்றிய ஐ.நாவின் அவசரகூட்டத்தில் பங்குபற்ற உலகின் பல நாடுகளிலிருந்தும் உயர்தரப்பிரதிநிதிகள் நியுயோர்க் வந்து சேர்ந்தவண்ணமுள்ளனர்.

சிரியா தூதுகோஷ்டித் தலைவர் நேற்று இங்கு வந்து சேர்ந்தார் சூடான் பிரதிநிதியும் வந்து கொண்டிருக்கிறர். இந்தியத் தூதுகோஷ்டிக்குத் தலைமை தாங்கி இந்தியாவிலிருந்து இந்திய வெளிவிவகார மந்திரி திரு, சாக்ளா வருகிறர்.

இன்றுமாலை கூடும் ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் அமெரிக்கா, ரஷ்யா, ஐ.அ. குடியரசு, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பேசுவார்கள். முதலாவது பேச்சாளராக ரஷ்யப்பிரதமர் திரு. கொஸிஜின் விளங்குவார். அவர் பேசுவதற்கு ஒரு மணித்தியாலம் முன்னதாக, மேற்கு ஆசிய விவகாரத்தில் அமெரிக்காவின் நிலையைத் தெளிவுபடுத்தி, அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்ஸன், நாட்டுமக்களுக்கு டெலிவிஷன் மூலம் தோன்றி உரையாற்றுவார்.

ஐ.அ.குடியரசின் சார்பாக, அதன் உதவிப் பிரதமர் சபையில் பேசுவார்.

இஸ்ரேல் சாரபாக, அதன் வெளிவிவகாரமந்திரி திரு. எபான்- சபைக் கூட்டத்தில் கலந்து உரை நிகழ்த்துவார்.

### உச்சிமகாநாடு

இதற்கிடையில், அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே உச்சிமகாநாடு ஒன்றுநடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் வலுவடைந்துள்ளன. ஜோன்ஸனும் கொஸிஜினும் சந்தித்து மேற்கு ஆசியா, வியட்னும், உலகசமாதானம் இவை பற்றிப் பேசுவரென எதிர்பார்க்கப்படுகிறது.

தென் வியட்னுமுக்குச் செல்லவிருந்த அமெரிக்க ராஜாங்க வெளிவிவகார காரியதரிசி திரு. மக்னமாரா தமது விஜயத்தைப் பின்போட்டுள்ளார். அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனின் பணித்தலின் பேரிலேயே மக்னமாரா தமதுவிஜயத்தை ஒத்திவைத்துள்ளார். நியுயோர்க்குக்கு ஐ.நா. கூட்டத்துக்குச் செல்லப்புறப்பட்ட அமெரிக்க ராஜாங்க பாதுகாப்புக்காரியதரிசிதிரு. டீன் ரஸ்க், தாம் அங்கு செல்வதை இரண்டு தினங்களுக்குப் பின்போட்டுள்ளார். இதுவும் ஜோன்சனின் விருப்பத்தின் பேரிலேயே நடந்துள்ளது. ரஷ்யப் பிரதமர் கொஸிஜினுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் போது, தனது முக்கிய அதிகாரிகளைத் தம்முடன் வாஷிங்டனில் வைத்துக்கொள்ள ஜனதிபதி ஜோன்ஸன் விருப்பம் கொண்டுள்ளார் என்பது தெளிவாகியுள்ளது.

### 'இஸ்ரேலுடன் பேசமாட்டோம்'

ஐ.நா வில் ஐ.அ. குடியரசின் நிரந்தரப் பிரதிநிதியாகப் பணியாற்றும் திரு. எல்கோனி. நேற்றுநியுயோர்க்கில் அளித்த ஒரு டெலிவிஷன் பேட்டியில் பேசும்போது, இஸ்ரேலுடன்பேச்சுவார்த்தைகள் நடத்த அரபு நாடுகள் ஒருபோதும் சம்ம

[4-ம் பக்கம் பார்க்க]

# தமிழக அரசின் புதிய ஆலோசனை

## நாட்டு நலனுக்காக 'சுபீட்சஅணி'கள்

சென்னை, ஜூன் 19

**தமிழக சமுதாய நலனை முன்னிட்டு, தமிழக ராஜ்யத்தின் 14 மாவட்டங்களிலும் 1000 பேர் அடங்கிய 'சுபீட்ச அணி'களை உருவாக்குவதற்குத் தமிழக அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை நேற்று கீழ் சபையில் தமிழக பட்ஜட்டைச் சமர்ப்பித்துப் பேசும் போது தகவல் வெளியிட்டார்.**

இச்சுபீட்ச அணியில் சேர்பவர்கள், நாட்டின் பொது நலனுக்கென நாளொன்றுக்கு 1 மணி நேர ஊழியம் செய்யவேண்டும். இதற்காக இவர்களுக்கு அரசாங்கம் எந்தவித ஊதியமும் அளிக்கமாட்டாது.

### ரூபா 10 லட்சம் ஒதுக்கீடு

இந்த சுபீட்ச அணிகளுக்கெனத் தமிழக அரசாங்கம் 10 லட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளதெனவும் திரு. அண்ணுதுரை கூறினர். இப்பணம் தரிசு நிலங்களைப் பயன்படுத்தல், தெருக்கள் அமைத்தல், முதியோர் கல்வி பரப்புதல் போன்ற வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

நாட்டுப்பற்றும், சமூக சேவை உணர்ச்சியும் உள்ளவர்கள் இச்சுபீட்ச அணிகளில் சேர்ந்து பணியாற்று [illegible] முதல் மந்திரி [illegible]

### ரூபா 61,800 மிச்சம்

ராஜ்ய சபையில் பேசுகையில், மந்திரிகள், சபாநாயகர் ஆகியோர் தமது மாதாந்த சம்பளத்தில் 50 சதவீதமும், உபசபாநாயகர் தமது மாதாந்தச் சம்பளத்தில் 30 சதவீதமும் குறைத்துக்கொண்டதன் பயனுச, அரசாங்கத்துக்கு வருடம் ரூபா 61,800 மிச்சமாகுவதாக முதல் மந்திரி திரு. அண்ணுதுரை தெரிவித்தார்

### பி. யு. ஸி. கட்டண விலக்கு

வருடம் ரூ. 1,500ம் அதற்குக் குறைவாகவும் வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்குப் பி. யு. ஸி. வகுப்புகளில் முழுக்கட்டண விலக்கு அளிப்பதென அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாகவும் அவர் அறிவித்தார். பின்தங்கிய வகுப்பினருக்கான கட்டண விலக்கு வரம்பு ரூபா 2000 ஆகும் எனவும் அவர் தகவல் வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நைலோனுல் பிள்ளைகளை அழகுபடுத்தும்பெற்றோர்களே

## அவர்கள் உள்ளத்தையும் அழகுபடுத்துங்கள்'

சுழிபுரம், திங்கள்

''நைலோன் சேட்டுகளை வாங்கிக் கொடுத்து தமது பிள்ளைகளை அழகு பார்க்கும் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் உள்ளத்தையும் அழகுபடுத்த வாழும் முறையினைப் புகட்டும் புத்தகங்களை வாங்கிக் கொடுக்க முன்வரவேண்டும். இன்னும் சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குத் தேவையான புத்தகங்களை வாங்கிக்கொடுக்காமல் நிமிடம் தவருது பீடியும் சிகரெட்டும் புகைப்பதில் தமது பணத்தை விரயம் செய்கின்றனர். பிள்ளைகளின் ஒழுக்கம், கல்வி, சத்துள்ள உணவு இவற்றில் பெற்றோர் அதிக கவனம் செலுத்தவேண்டும்.'' மேற்கண்டவாறு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டி பரிசளிப்புவிழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய கல்லூரி அதிபர் திரு. என். சிவஞானம் குறிப்பிட்டார்.

பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டவடபகுதிகல்வி அதிகாரி திரு. சி. ஏ. ஞானசேகரம் பேசுகையில், மாணவர்களின் ஒழுக்கம் தான் வருங்காலத்தின் உயர்வுக்கு வரம்பு என்பதை நினைவில் வைத்திருக்கவேண்டும் என்ருர்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி ஞானசேகரம் பரிசுகளை வழங்கினுர். பாண்டியன் இல்லம் முதலாம் இடத்தையும், சோழ இல்லம் இரண்டாம் இடத்தையும், சேர இல்லம் மூன்ருவது இடத்தையும் பெற்றன.

# ''விளையாட்டு ஒருபோதும் கல்வியை பாதிக்காது''

## — கல்லூரி அதிபர்

உடுப்பிட்டி, திங்கள்

''ஆடம்பரமான முறையில் நடாத்தும் விழாக்கள் பயனற்றவை. ஆடம்பர செலவுகளை நீக்கி, அவற்ருல் மிச்சமாகும் பணத்தைக் கொண்டு மாணவர்களுக்கு அதிகபரிசுகளை வழங்கலாம்.

விளையாட்டுப் போட்டிகள் ஒருபோதும் கல்வியைப் பாதிக்கமாட்டாது. சில பெற்ருர் விளையாட்டுப் போட்டிகள் பிள்ளைகளைப் பழுதாக்கிவிடுமெனத் தவருக நினைப்பதுவேதனையளிக்கிறது விளையாட்டுடன் கூடிய கல்வியே மணவனின் எதிர்கால வாழ்விற்கு உறுதியையும், வாழ்க்கைப் போராட்டத்தில்வெற்றிபெறக்கூடிய தெம்பையும் ஊட்டும்'' என்று கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கல்லூரி அதிபர் திரு. வி. சோமசுந்தரம் கூறினுர். பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

போட்டிகளில் மஞ்சள் இல்லம் முதலிடத்தையும், சிவப்பு இல்லம் இரண்டாமிடத்தையும், நீல இல்லம் மூன்ருமிடத்தையும் பெற்றன.

## நிதி சேகரிக்க முடிவு

சுழிபுரம், திங்கள்

புற்றுநோய் மேலும் பரவாமல் தடுக்க தீவு எங்கும் பிரசாரம் செய்வதற்கு நிதி சேகரிப்பதில் யாழ்மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்கத்தினர் அதிக கவனம் செலுத்தவேண்டும்என நிதிக்குழு அமைப்பாளர் திரு. மு. தம்பிஐயா சங்கக் கமிட்டிக் கூட்டத்தில் குறிப்பிட்டதைத்தொடர்ந்து நிதிசேகரிக்கும் வகைகள் பற்றிஆராயப்பட்டது. லோட்டரி மூலம் பணம்திரட்டநடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## 'வல்வை மக்களை மறக்கமுடியாது'

வல்வெட்டித்துறை, திங்கள்

'வல்வை மக்களைப்பிரிந்து செல்வதையிட்டுமிகவும் துக்கப்படுகிறேன்; இங்குசேவை செய்து வந்தகாலத்தில் இப்பகுதிமக்கள்என்னை அன்பாக நடத்தி வந்திருக்கிருர்கள்' என்று வல்வெட்டித்துறை இந்திராணி இரசினர் வைத்தியசாலையில் கடந்த ஆறு வருடகாலமாக வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற டாக்டர் எஸ் பாலகிருஷ்ணன் தமக்களிக்கப்பட்ட சேவை நலம் பாராட்டுவிழாவின் போது மேற்கண்டவாறு கூறினுர்.

பருத்தித்துறை எம். பி. கே. துரைரத்தினம் கலந்துகொண்ட இவ்விழாவுக்கு பட்டினசபைத்தலைவர் திரு. வி. இரத்தினவடிவேலு தலைமை வகித்தார். இவ்விழா சிதம்பராக்கல்லூரியில் நடைபெற்றது

## 'சிரமதானம் மகத்தானசேவை'

உடுவில், திங்கள்

''சிரமதானம் என்பது சாதி, இன, மத பேதமற்ற ஒரு தேசிய சேவையாகும். சிரமதான மூலம் செய்யும் வேலைகளுக்கு அரசினர் ஒரு குறித்த தொகையை நன்கொடையாக வழங்கிவந்த போதிலும் கிராம மக்கள் ஒன்று திரண்டு சிரமதான இயக்கத்தில் ஈடுபட்டால் அதுவே எமது வருங்கால சந்ததியினருக்கு நாம் செய்யும் மகத்தானதொரு சேவையாகும்.'' என்று சங்குவேலி கேலன்காமம் ருேட்டை சிரமதானஇயக்க மூலம் புனரமைப்பு செய்வதுபற்றி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டமொன்றில் பேசிய சங்குவேலி கிராம முன்னேற்றச் சங்கக் காரியதரிசி திரு. த. செல்லத்தம்பி இவ்வாறு கூறினுர்.

சங்குவேலி சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்ற இவ்வாலோசனைக் கூட்டத்துக்கு உடுவில் கிராமசேவகர் திரு. எஸ். எஸ் சின்னத்தம்பி தலைமை வகித்தார்.

## வருடாந்தக் கூட்டம்

சுழிபுரம், திங்கள்

மானிப்பாய் சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் சமூகஜோதி சி. தியாகராசா தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர்: முதலியார் சி. தியாகராசா, உபதலைவர்கள்: திருவாளர்கள் ஏ. நாகராசா, பி. நாகலிங்கம், ஏ. கந்தையா, காரியதரிசி: எம். நவராசசிங்கம், உபகாரியதரிசி: எஸ். ஜெயராசா, தனாதிகாரி: வி. தியாகராசா, உபதனாதிகாரி: [illegible] நாதன் நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## ''வாலிப சமுதாயத்துக்கு உழைத்தவர்''

உடுப்பிட்டி, திங்கள்

''இன்றைய வாலிபர்கள் தமிழறிஞர்கட்கு விழா வெடுப்பதை விடச் சினிமா நடிக நடிகைகளுக்கு விழா வெடுப்பதையே பாய்க்கியமெனக் கருதுகிருர்கள். அறிஞர் கந்த. முருகேசனுர் வாலிப சமுதாயத்தை நல்ல முறையில் உருவாக்குவதற்கு தனதுவாழ் நாளைச் செலவழித்தார்'' என்றுதிரு. வ. சிவராசன் புலோலி தமிழ் இளைஞர் கழகத்தினரால் புற்றளைப் பாடசாலை மண்டபத்தில் நடாத்தப்பட்ட தென்புலோலி அறிஞர் கந்த. முருகேசனுர்ஞாபகார்த்த தின விழாவில் பேசுகையில் கூறினுர்.

இவ் விழாவிற்குத் திரு. க. பொன்னையா தலைமை வகித்தார். திரு. த. மாலோகமணி உட்பட வேறு பலரும் பேசினர்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்.

ஐக்கிய இலங்கை போக்குவரத்துச் சபைத் தொழிலாளர் கழகத்தின் வருடாந்தக்கூட்டம் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், உபதலைவர்கள் திருவாளர்கள் எம். சிவசிதம்பரம் எம். பி., வி. ஆனந்தசங்கரி, ரி. சிவஞானம். எஸ். பொன்னம்பலம், எஸ். சங்கரப்பிள்ளை, பொதுக்காரியதரிசி கு. தனபாலசிங்கம், உதவிக்காரியதரிசிகள் எஸ். ஜெயசிங்கம், ரி. கமலநாதன், தனாதிகாரி எஸ். சத்தியசீலன், உதவித் தனாதிகாரிகள் எஸ். ஞானப்பிரகாசம், பி. பாலச்சந்திரன். 15 பேரடங்கிய முகாமைச்சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. [ந. நி.]

ஃ ஃ ஃ

சுழிபுரம், திங்கள்

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவிற் பரிபாலனசபையின் வருடாந்தக் கூட்டம் திரு. வ. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பண்டிதர் அ. ஆறுமுகம், உபதலைவர்: திரு. வ. இராமலிங்கம், காரியதரிசி: திரு. சி. ஆறுமுகசாமி, தனாதிகாரி: திரு. இ. அப்பாத்துரை.

ஃ ஃ ஃ

பண்டத்தரிப்பு, திங்கள்

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இளவாலை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பாதுகாவலர் வண. டொமிக்கல், தலைவர் ரி. பெனடிக்ற், காரியதரிசி அ. அந்திரேஸ், தனாதிகாரி ரி. எஸ். அன்ரனிமுத்து. நிர்வாக சபை உறுப்பினர்கள்: ரி. ஞானப்பிரகாசம், நீ. பத்திநாதன், பி. பெர்னுட், எல். சேவியர்.

வலி. மேற்கு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. ரி. நடராசா இக்கழகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

## மணவாளக்கோல விழா

உடுப்பிட்டி, திங்கள்

அல்வாய் தெற்கு மாலி சந்தி விநாயகராலய மணவாளக்கோல உற்சவ விழா வெகு சிறப்பாகக்கொண்டாடப்பட்டது.

உருத்திரபுளையுடன் அடியார்கட்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

# ஐ.நா. பொதுச் சபையில்..

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

திக்காதெனத் தெரிவித்தார். அரபுநாடுகள், போரில் தாம் இழந்துள்ளபகுதிகளை மீட்டே தீரும் எனவும்அவர் கூறினுர்.

## 'அரபுநாடுகள் பேசவேண்டும்'

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றச் செல்லுமுன், டெல் அவிவில் பத்திரிகையாளரிடம் பேசுகையில், இஸ்ரேல் தனது பழைய நிலைக்குச்செல்ல வேண்டும் எனக் கோரும் எந்த ஐ.நா. தீர்மானத்துக்கும் இஸரேல் இணங்காது என இஸ்ரேல் வெளிவிவகார மந்திரி எபான் அறிவித்தார். தற்போதுள்ள எல்லைக்கோடுகளை மாற்ற அரபுநாடுகள் விரும்பினுல், அவை இஸ்ரேலுடன் ஒரு சமாதான உடன்படிக்கைக்கு வரவேண்டுமெனவும் அவர்மேலும்தெரிவித்தார்.

## மன்னர் ஹுசெயின கோரிக்கை

அரபு நாடுகளின் உச்சிமகாநாடு ஒன்றைச்சனிக்கிழமைக்கிடையில் நடத்துமாறு ஜோர்தான் மன்னர் ஹுசெயின் மற்ற அரபு நாட்டுத் தலைவர்களிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். ஏற்கனவே தனது ஆலோசனைப்படி உச்சிமகாநாடொன்று நடைபெற்றிருந்தால், இப்போது ஐ.நா. வில் அரபுநாடுகள் ஏகோபித்த தீர்மான மொன்றைச் சமர்ப்பித்திருக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## விமானம் தடுத்து நிறுத்தப்பட்டது

குவெயித்தில் கூடிய அரபு நாடுகளின் வெளிவிவகார மந்திரிகள் ஐ.நா. பொதுச் சபைக்கூட்டத்தில் பங்குபற்ற, நேற்று குவெயித்திலிருந்து நியுயோர்க்குக்கு விமானமூலம் புறப்பட்டனர். அவர்கள் பறந்து சென்ற விமானம் நேற்றுத் துருக்கி அரசங்காத்திஞல் அங்காரா விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டது. போதிய அனுமதிப்பத்திரம் விமானத்திடம் இருக்கவில்லைஎன்றகாரணத்தில் அது தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனுல் சிறிது நேரத்துக்குப்பின் விமானம் தனது பிரயாணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டது.

## இஸ்ரேல் புகார்

இஸ்ரேல்—சிரியா எல்லையில் கடந்த ஒருவாரமாக நிலவும் போர்நிறுத்தஉடன்படிக்கையை சிரியா மீறியதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது. அண்மையில் நடைபெற்ற போரில், இஸ்ரேல்கைப்பற்றிய குனேத்ரா என்னுமிடத்தின் வடபகுதியில் சிரியா ராணுவ வாகனங்கள் மூன்று, இஸ்ரேல் துருப்புக்கள்மீது சுட்டதாகவும், அவற்றை இஸ்ரேல் துருப்புக்கள் துரத்தியடித்துள்ளதாகவும் இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது. இச்செய்திபற்றிய குறிப்பெதுவும் இதுவரை சிரியாவிலிருந்து கிடைக்கவில்லை.

## மண்டலாபிஷேகம்

சங்கானை, திங்கள்

சண்டிலிப்பாய் ஐயனுர் கோவிலில் கடந்த சனிக்கிழமை மண்டலாபிஷேகமும் விசேஷ ஆராதனையும் நடைபெற்றது. சோமாஸ்கந்தக் குருக்கள் இதனை நடத்திவைத்தார்.


யானை மார்க்

சூடம்




இலங்கையிலேயே தயாரிக்கப்பட்டு முதன்முறையாத இலங்கையிலேயே டின்களில் அடைக்கப்படும் உன்னத்மான கற்பூரவில்லைகள். இறக்குமதியாகும் மற்றெந்தக கற்பூரவில்லைகளுக்கோ, டின்களுக்கோ எந்த வகையிலும் சளைக்காத உயரியதரச் சிறப்புடையவை.

ஒவ்வொரு 3|4 இறுத்தல் டின்னிலும் 960 வில்லைகள்.

இது தவிர வேறு அளவான பக்கட்டுகளும் உண்டு.

எங்கும் கிடைக்கும

கற்பூரம் வாங்கும் போது

யானை மார்க் டின் சூடம்

என்று கேட்டு வாங்குங்கள்.

யாழ்ப்பாணத்தில் விநியோகஸ்தர்கள்;-

A. வைத்திலிங்கம் அன் கோ.,

45, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்கள்:

ஊவா கற்பூரத் தொழிற்சாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

வரணிக் கிராம சபை

### கேள்வி விளம்பரம்

மருத்துவ மாதர் மனை திருத்தியமைத்தல் வேலை

மேற்படி வேலை செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் இச்சபையால் 28-6-67 நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணமாய் ரூபா 25/- கட்டியதன் பெயரில் வழங்கப்படும்.

2. பத்திரப்பணமாய் ரூபா 5/- (ஐந்து) கட்டப்படுதல் வேண்டும். இப்பணம் திருப்பித் தரப்பட மாட்டாது.

3. கேள்விகள் மேற்படி தலைவரால் 30-6-67 காலை 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். அதே நேரத்தில் கேள்வியின் பிரதியொன்று யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி அதிபருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் அவசியம்.

4. மேலதிக விபரம் வேண்டுமேல் காரியாலய நேரங்களில் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

க. ஆறுமுகம்,
அக்கிராசனர்,
வரணிக் கிராமசபை,
வரணி.

சி. நா. இராசா,
இலிகிதர்.
17-6-67 2368

அரசாங்க கேள்விகள்

பொது வேலைத் திணைக்களம்

என் 1525 - வவுனியா மாவட்டத்தில் மதுவரிப் பகுதியில் பொறியிட்ட போத்தல்கள் வைப்பதற்கு ஒரு களஞ்சிய அறை அமைத்தல். கேள்விகள் முடிவு திகதி 12-7-67. இதன் முழு விபரங்களுக்கும் 16-6-67 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, II-ம் தொகுதியைப் பார்க்கவும். 3515

### கேள்வி விளம்பரம்

ஓமந்தை கிராமசபை

ஓமந்தை - பெரிய விளாத்திக்குளம் றோட் வேலைக்குரிய கேள்வி விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரரிடமிருந்து 27-6-67 காலை 10 மணி வரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் 26-6-67க்கு முன் அலுவலக நேரத்தில் கேள்வி வைப்புப் பணம் ரூபா 25/-ம் விண்ணப்பப்பத்திரப்பணம் ரூபா 5/-ம் கட்டி கிழக்கு மூலை வடக்கு (ஓமந்தைக்) கிராம சபை அலுவலகத்தில் விண்ணப்பப்பத்திரத்தைப் பெறலாம். எம்மிடமிருந்து பெறும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும். மேலதிக விபரங்களை எமது கிராமசபையில் அறியலாம்.

அ. வீரகத்தி ஜே. பி.,
கி.ச. அக்கிராசனர்.
கிராம சபை அலுவலகம்,
கிழக்கு மூலை வடக்கு,
ஓமந்தை.
18-6-67. 2367


**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
ஜெமினி, நாகேஷ்வரராவ்
சாவித்திரி
நடித்த
**மனிதன் மாறவில்லை**



**கோழித் தீன்**

முட்டையிடும் கோழியை திடமாக வைத்திருக்க, முட்டையிட்டு ஓய்ந்த கோழியை முட்டையிடச் செய்ய

- O குஞ்சுகளுக்கு
- O வளரும் கோழிகளுக்கு
- O வளரும் சேவல்களுக்கு

சுத்தமான, நம்பிக்கை வாய்ந்த கோழித்தீன்.

விநியோகிப்பவர்கள்
எஸ். சேனாதிராசா
கல்லூரி வீதி,
நெல்லியடி.
அருணா ஏஜன்ஸீஸ்,
அளவெட்டி.
2355


### 'விளையாட்டுப் போட்டி ஒரு வழிகாட்டி'

காங்கேசன்துறை, திங்கள்

மாணவர்களிடம் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலைபெறச் செய்வதற்கு விளையாட்டுப்போட்டி ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளதென்று தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் சுப்ரீண்டன்ட் திரு. ஜி. டபிள்யூ லியனகே பேசுகையில் கூறினார்.

இளைஞர் தேகதிடம் பெறுவது நாட்டின் நல்ல எதிர்காலத்துக்கு எவ்வளவோ துணை புரியும் என்றும் அவர் கூறினார்.

### இடமாற்றம்

சங்கானை, திங்கள்

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய டாக்டர் கே. நடனச்சந்திரன் இம்மாதம் 15-ந் திகதியிலிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இவரது இடத்துக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலிருந்து டாக்டர் பி. வி. சிறீகாந்தன் மாற்றலாகி வந்துள்ளார்.

### 'மின்சாரம் வேண்டும்'

சுழிபுரம், திங்கள்

சித்தங்கேணி மக்கள் தமக்கு மின்சாரம் பெற்றுத்தரும்படி உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்தைக் கோரியுள்ளனர். இது பற்றித் தெரிவிக்கும் மகஜரொன்றை இப்பகுதி மக்கள் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.


**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
ஞாயிறு தினங்களில் 4காட்சிகள்
ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ
நடித்த
**தங்கத் தம்பி**

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி—பத்மினி
நடித்த
**தூக்கு தூக்கி**
[புதிய கொப்பி]

**REGAL - JAFFNA**
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
THE SPY WITH MY
FACE


## வரி விளம்பரம்

### தேவை

விற்பனையாளர்

யாழ்ப்பாணப் பகுதி சாராயத் தவறணைகளுக்கு இரண்டு விற்பனையாளர் தேவை. தமிழ் S. S. C. சித்தி அடைந்து இருக்க வேண்டும். ரொக்கபிணை ரூபா 1000/- கட்டவேண்டும். அதோடு எங்களுக்கு தெரிந்த பெறுமதியான ஒருவரின் நேர்முகப் பிணையும் வேண்டும். விருப்பமானவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு நேரில் வரவும் S. R. கர்தையா No 10, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 2459

### வாடகைக்கு

வீடு

நாலு அறைகளைக் கொண்ட விசாலமான வீடு யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் காங்கேசன்துறை வீதியில் வாடகைக்கு இருக்கின்றது. முதலாம் ஒழுங்கை பிறவுன் வீதியிலிருக்கும் கந்தசாமி இல்லத்தில் விசாரிக்கவும். 2457

### விற்பனைக்கு

கோழிகள்!

கேரும் பேடு ரூபா15/- கூவும் சேவல் ரூபா6/- ஒரு மாசப்பேடு ரூபா4/-முட்டை தாங்கி[EggTray] -/75சதம். அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1883

லொறி

நல்ல நிலைமையிலுள்ள ஒஸ்டின் டீசல் [மொக்கன் மொடல்] லொறி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: விக்ரேஸ், 6, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 2439

மோட்டார் சைக்கிள்

EY 9000 தொடர் இலக்கம் உடைய B. S. A. 3.5 மோட்டார் சயிக்கிள் விற்பனைக்குண்டு விபரங்கட்கு: ச. ச. ஸ்ரீஸ்கந்தராசா, ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம். 2450

காணி

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 395-ம் இலக்கத்திலுள்ள காணியில் இரண்டு பரப்பு விற்பனைக்கு உண்டு. 2455

## 'சீனி' மாஸ்டர்



கடமையில் பற்று, தொண்டில் ஆர்வம்; அதனுடன் அடக்கம், இனிய சுபாவம் இத்தனையும் பெற்ற ஓர் ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையொட்டி அந்தக் கல்லூரி ஆசிரியர்களால் நடத்தப்பட்ட சேவை நலம் பாராட்டு வைபவத்துக்கு நானும் சென்றிருந்தேன்.

37 வருடகாலமாக வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெறும் திரு. து. சீனிவாசகத்தின் சேவைக்குத் தான் அந்த நன்றி வைபவம் நடைபெற்றது. இளமை கலையாத சுருள் கேசத்துடன், பாரியார் பக்கத்திலிருக்கமென் சிரிப்புடன் அமர்ந்திருந்த சீனிவாசகத்தின் சிறப்பை, பணியை, பெருமையை அதிபரும், ஆசிரியர்களும் வேறு பிரமுகர்களும் வரையின்றி வாயார வாழ்த்தினார்கள். கேட்க இனிப்பாகஇருந்தது. 'சீனிவாசகத்துக்கு அறுபது வயதாகி விட்டதா? நம்பவே முடியவில்லை' இப்படிஒரு வாழ்த்துச் செய்தியைவைபவத்தில்கலந்துகொள்ள முடியாத ஒருவர் அனுப்பி வைத்திருந்தார். சேவையில் தோய்ந்து கிடக்கும் ஆசிரியர் சீனிவாசகத்தைப் பற்றி முதுமை கவனிக்கவில்லை என்பதை அவர் முகம் தெளிவுறக்காட்டிக் கொண்டிருந்தது. இதற்கு ஒழுக்கமும் கட்டுப்பாடும் காரணம் என ஒருவர் சுட்டிக்காட்டியது சரியான விளக்கம் தான்.

கல்லூரி அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் சீனிவாசகத்தின் சேவையை தனக்கே உரித்தான வகையில் தெரிவித்தார்: 'மறுபிறவியிருக்குமானால் நான் சீனிவாசகம், உப அதிபர் திரு, கா. வைரமுத்து மற்றும் இக் கல்லூரி ஆசிரியர்களுடன் மீண்டும் கடமையாற்ற வாய்ப்பு இருக்க வேண்டும்' என்பது அவர் கேட்ட வரம். ஆசிரியர்கள் கல்லூரிகளில் அடிபட்டுக் கொள்வதாகக் கேள்விப்படும் இக் காலத்தில் இந்த அதிபர் இப்படி ஒரு வரம் கேட்பதாக இருந்தால் அந்தக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் பாக்கிய வான்கள் என்பது சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை.

ஓய்வு பெறும் திரு. சீனிவாசகத்திடம்கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில்! 'ஓய்வா? இனிமேல் தான் எனக்கு அதிக வேலை இருக்கப்போகிறது.' சேவையில் ஊறியவர்களுக்கு அதிக ஓய்வு இருப்பதில்லை!

—குருவி

### ஆங்கில ஆசிரியர் இல்லை

சுழிபுரம், திங்கள்

வட்டுக் கோட்டைத் தொகுதியிலுள்ள அநேக பாடசாலைகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இல்லையென அறியப்படுகிறது.


**2-வது வெற்றி வாரம்**

**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] **ஈறோஸ்** [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
**விஜயா** [மட்டுநகர்] **ஸ்ரீகிருஷ்ணா** [திருமலை] **மொடேர்ன்** [பதுளை]
**மொடேர்ன்** [பண்டாரவளை] **விஜிதா** [ஹட்டன்] **தீவொளி** [நுவரெலியா]
**கல்யாணி** [நாவலப்பிட்டி]
ஆகிய திரைகளில்
தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!
நடிக மன்னன் **சிவாஜி கணேசன்,**
நடிக ராணி **கே. ஆர். விஜயா,**
**ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா,**
**நாகேஷ்**



வி. கே. ஆர். பிக்சர்ஸ்
**செல்வம்**



**பவுரின்**
காய்கறிப் போளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை கிராமத்துக்கு ஏற்படும் அபாயம்

நாரந்தனை, திங்.

வேலணைமேற்கு, கெட்டில் கடற்கரைப் பகுதியிலுள்ள கடலோரத்தில் ஊரிமணலை பிறஊர்களிலிருந்து பலர் வாகனங்கள் மூலம் வந்து வெட்டி அள்ளிச் சென்று விடுவதால் கடல்நீர் கிராமத்தின் உட்புகுந்து கிராமத்தையே அழித்து விடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது.

இவ்விதம் மணல் அள்ளிக்கொண்டு செல்லப்படுவதால் கடற்கரைக்கு அண்மையிலுள்ள மீன் பிடித் தொழிலாளர்களின் குடிசைகள், மற்றும் குடியிருப்பு இல்லங்கள் கால், நடைகளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் மேச்சல் தரைகள் ஆகியன பெரிதும் சேதப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தடுப்பதற்காக வேலணைக் கிராமசபையும் வேலணைமேற்கு மகேஸ்வரி மீன் பிடித்தொழிலாளர்கூட்டுறவுச் சங்கமும் எவ்வளவோ முயற்சி செய்து வந்தபோதும் இதுவரை இதனை முற்றாகத் தடை செய்ய முடியாத நிலையிருப்பதாய் அறியப்படுகிறது.

இது விஷயத்தில் தலையிட்டு இவ்விதம் வெளியூர்களிலிருந்து வாகனங்கள் மூலம் மண் அள்ளுவது முற்றாகத் தடைசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேலணை கிராமசபையினரும் பலசங்கங்களும் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும் தீவுப்பகுதி காரியாதிகாரிக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்,

கடல் நீர்பெருக்கெடுக்கும் காலங்களில் கடல் வெள்ளம் இப்பகுதி மீன் பிடித் தொழிலாளர்களின் குடிசைகளுக்குள் செல்லாதவாறு தடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் கிராம சபையினர் கோரியுள்ளனர்.

புதுடில்லியில

## சீனர்களுக்கு கட்டுப்பாடு

புதுடில்லி, ஜூன் 19

புதுடில்லியிலுள்ள சீனத் தூதரகத்திலுள்ள சீனப் பிரஜைகள்மீது இந்திய அரசாங்கம் கட்டுப்பாடு விதித்திருக்கிறது. தூதரகத்தை விட்டு வெளியில் வரக்கூடாதென்றும், மீறி வந்தால் அவர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பேற்க முடியாதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், சீனத் தூதரகத்தின் முதல் காரியதரிசி 48 மணி நேரத்திற்குள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பீகிங்கிலுள்ள இந்தியத் தூதரக ஊழியர்கள் தாயகம் புறப்பட வசதியளிக்கப்படாதபட்சத்தில் இந்தியாவில் காயமடைந்துள்ள சீனர்களை ஏற்றிச் செல்ல வரவிருக்கும் சீன விமானத்துக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது என்றும் இந்தியா நிபந்தனை விதித்துள்ளது.

வடபகுதிக்கு

# 'மகாவலிகங்கையை சுலபமாகதிருப்பலாம்'

### பொறியியல் நிபுணர்சங்க தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்.

''இலங்கை வந்திருக்கும் அமெரிக்க நிலவியல் நிபுணர்கள் மகாவலிகங்கையை இலங்கையின் பல பாகங்களுக்கும் திருப்புவதன் மூலம் இலங்கையில் விவசாயத்தை அபிவிருத்தி செய்யலாம் என தமது ஆராய்ச்சி அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். இதன் மூலம் மகாவலிகங்கையை வடக்குப் பகுதிக்கும் சுலபமாகத் திருப்பக் கூடியதாக இருக்கின்றது.''

மேற்கண்டவாறு வட இலங்கை விஞ்ஞான ஆசிரியர்களால் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடாத்தப்படும் பாடசாலை மாணவர்களின் விஞ்ஞானக் கண்காட்சியை நேற்றுமாலை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அகில இலங்கை பொறியியல் நிபுணர்கள் சங்கத் தலைவர் திரு. எஸ். ஆறுமுகம் குறிப்பிட்டார். சங்கத் தலைவர் திரு. ஜே. எஸ். அரியரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. எஸ். ஆறுமுகம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தொண்டமானாற்றுக்கூடாக மகாவலி கங்கையைத் திருப்பக் கூடிய வசதியுள்ளதாக இருக்கின்றது. தற்போது தொண்டமானாறு உப்பு நீராக இருப்பதால் அதை நன்னீராக மாற்றிய பின்னர் மகாவலி கங்கையை வடபகுதிக்குத் திருப்பினால் வடபகுதி விவசாயத்தைமுன்னேற்றலாம். இதற்கு விஞ்ஞான ஆசிரியர்களும், விஞ்ஞான மாணவர்களும் தமது ஒத்துழைப்பை நல்குவது அவசியமாகும். [ந. நி]

## ஐயாறன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

யாது. தெரியவும் அவர் விரும்புவதில்லை. டயர் கிடைக்காத காலம் அது. தமது காரை மிக மோசமான ரஸ்தாக்களில் தாமே ஓட்டிச் சென்று, குடும்பத் தலைவனையோ, புதல்வனையோ புயலில் இழந்த எளிய குடும்பத்தாரின் வீடு தேடிப் போய். உதவிப்பொருள்களை விநியோகித்தார். பன்முறை டயர் 'பஞ்ச' ராகியும், அவர் மனம் சலியாது இந்தத் தொண்டை விடாது செய்தார்.

ஃ ஃ ஃ

மதுரை ஆதீன மகா சன்னிதானம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்து, திருக்கேதீச்சரத்துக்குச் செல்லுகையில், என்னையும் தம்முடன் காரில் வருமாறு அழைத்தார். இதை டாக்டரிடம் சொன்னதும், 'நமது மரியாதைக்காக, நம்காரும் உங்களுக்காகச்செல்லவேண்டும்' என்று சொல்லி, தமது காரை திருக்கேதீச்சரத்துக்கு அனுப்பிவைத்தார்கள். சின்ன விஷயம் தான் என்றாலும் இந்த அன்பையும், பெருந்தன்மையையும் எப்படி மறக்கமுடியும்? இவ்விதம்இன்னும்எவ்வளவோ!

அமரர் டாக்டரின் இவ்வித உண்மை அன்பால்தான் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களிலே இன்றும் அவர் வாழ்கின்றார். அவர் சிரஞ்சீவி. உண்மை தெய்வ பக்தியிருப்பினும், வெளியில்காட்டிக்கொள்ளமாட்டார். அவரது அன்பு வாழ்க்கை நமக்கும் ஒரு வழிகாட்டியாக இருப்பின் நாமும் நிலமிசை நீடுவாழலாமல்லவா?

ஃ ஃ ஃ

ஒருவனாகி நின்றான்<br>
இவ் வுலகெலாம்<br>
இருவராகி நின்றார்கட்<br>
கறிகிலான்<br>
அருவரா அரை<br>
ஆர்த்தவனார் கழல்<br>
பரவுவாரவர் பாவம்<br>
பறையுமே.<br>
— அப்பர்சுவாமிகள்.

[இவ்வுலகமெல்லாம் தான் ஒருவனே ஆகி நின்றவனும், திருமாலும் பிரமனுமாகிய இருவராகி நின்றவர் அறிய இயலாதவனும், அரிய பாம்பினை இடுப்பில் கட்டியவனும் ஆகிய இறைவனது நிறைந்த கழலணிந்த திருவடிகளை வணங்குவாரின் பாவங்கள் கெடும்.]

## இலங்கை ஒலி பரப்பு கூட்டுஸ்தாபனம

**செவ்வாய் 20 - 6 - 67**

**செய்திகள்:** காலை 7-00. பகல் 12-45, மாலை 6-00. இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்** காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்புகள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்** பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்** மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர் விருப்பம்.

இரவு 6-15 குதூகலம், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 வீணை — எஸ். செல்வநாயகம், 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாதஸ்வரம் — வி. குமாரசாமி, 10-15 குரல்வகை.

## ஓர் உத்தம புருஷன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]]

புண்ணிய பூமி என்று ஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் அவர்கள் கூறுவார்கள்.

பின்னால் தங்கியிருப்பவர்களின் மனதில் வாழ்பவர்கள் ஒருபோதும் இறப்பதில்லை. இது டாக்டர் சண்முகரத்தினத்துக்கு சாலவும் பொருந்தும். டாக்டர் அவர்களின் உன்னத சேவைகள் யாவும் வெற்றி பெற வேண்டுமெனவும், தமிழர் பண்பாடு, நாகரீகம், சீலநெறி, பொதுச்சேவை, அவையடக்கம் முதலியவற்றிற்கெல்லாம் குன்றின் மேலிட்ட தீபம்போல் பிரகாசிக்கும் அன்னவருடைய தொண்டு வாழவேண்டுமெனவும் கிருபாநிதியாகிய சிவபெருமானை இறைஞ்சுகிறேன்.

## அடுத்த விசாரணை ஜூலை 31-ந் திகதி

யாழ்ப்பாணம், செவ்.

வடபகுதி அசைஸ்நீதிமன்றத்தின் முதலாவது பருவகாலவிசாரணை இன்றுடன் முடிவடைகிறது.

இரண்டாவது பருவகால விசாரணை ஜூலைமாதம்31ந் திகதி காலை ஆரம்பமாகும் என அறியப்படுகிறது. இவ் விசாரணை நீதியரசர் திரு. சி. மாணிக்கவாசகர் முன்னிலையில் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

## மீன் பிடி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உற்பத்தியும், மீன் பிடியும் ஒரே நிலையில் இருந்தபோதிலும் விவசாய உற்பத்தியில் அரசாங்கம் காட்டும் சிரத்தையை மீன்பிடித்துறையில் காட்டுவதில்லையென்றும், போதிய மீன்பிடி வள்ளங்கள், இயந்திரங்கள் ஆகியன இல்லாததால் பல மீனவர்கள் மிகவும் கஷ்டமுறுவதாகவும், இதனால் மீன்பிடித் துறை வளர்ச்சி பற்றி ஆராயும் பொருட்டு அதற்கு ஒரு குழுவை நியமிக்கும்படியும் கடந்த யாழ். மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் பல அங்கத்தவர்களும் வேண்டியதாகவும்இது பற்றித் தான் நடவடிக்கைகள் எடுக்கவிருப்பதாகவும் திரு. வேர்னன் அபயசேகரா தெரிவித்தார். அவர்மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் தெரியாதபொலிஸாரை கடமையாற்ற நியமிப்பதால் பல தமிழ் பேசும் மக்களும் தமதுமுறைப்பாடுகளை சரியான முறையில் பதிவு செய்ய முடியாது கஷ்டமடைவதாக சென்ற மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில் எம்.பி.ஒருவர் தெரிவித்திருந்தார். ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் பொலிஸாரையும் தமிழ் தெரிந்தவர்களாக நியமிக்கும்படியும் தெரிவிக்கப்பட்டது, அண்மையில் வல்வெட்டித் துறையில் கடமையாற்றிய பொலிஸ் ஊழியர்கள் அனைவரும் இடமாற்றம் செய்யப்பட்டபின்னர் அங்கு நியமிக்கப்பட்டுள்ள பொலிசார் அனைவரும் தமிழ் தெரிந்தவர்களேயாகும்.' இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தாம் பேச்சுவார்த்தை நடாத்த விருப்பதாகவும் அவர்எடுத்துக் கூறினார்.

அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது ஆலயப்பிரவேசம் முக்கியமானதொன்றாகும். இரண்டு மாதங்களுக்குள் இரண்டு கோவில்கள் சிறுபான்மை மக்களுக்காகத்திறந்துவைக்கப்பட்டுள்ளன. அகில இலங்கை இந்துமாமன்றத்தினர் அநேக கோவில்கள் மேலும் திறக்க நடவடிக்கை எடுத்து வருவது வரவேற்கத்தக்கதாகும், அரசாங்கத்துடன் சேர்ந்து ஆலயப் பிரவேசத்துக்கு ஒத்துழைப்புக் கொடுக்கும் இந்துமாமன்றத்தை நான் பாராட்டுகிறேன்.

[illegible] உற்பத்திபற்றியும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். [ந. நி]

## உடுவில் கொலை முயற்சி வழக்கு; இன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்.

உடுவில் கொலை முயற்சி வழக்கு தீர்ப்பு இன்று வழங்கப்படும். நீதியரசர் திரு. வி. தென்னக்கோன் இன்று காலை தமது உரையை நிகழ்த்திய பின் தீர்ப்பை வழங்குவார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை நான்காவது தினமாக வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி சார்பில் ஆஜரான புறக்டர் ஏ. அன்ரனியும் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. திசா. பண்டாரநாயக்காவும்தொகுப்புரைநிகழ்த்தினர்கள்.

இவ்வழக்கில் 65-ம்ஆண்டு டிசம்பர் 2-ம் தேதி உடுவிலில் வல்லி ஐயம்பிள்ளையை தவசிகந்தையா என்பவர் கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் ஏ.அன்ரனி நியமிக்கப்பட்டிருந்தார்.

## கோட்டை . . .

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பணவசதியை, இலாகா பெற முடியாதிருந்ததென்றும் தற்பொழுது யாழ்ப்பாண கிறிஸ்தவ சங்கம், ஆலயத்தை பாரமெடுத்திருப்பதாகவும் இது நன்கு பயன் படுத்தப்படுமென்றும் கூறினர்.

கையளிப்பு வைபவத்தை தொடர்ந்து வழிபாடு நடைபெற்றது.

## சிறிமா-சாஸ்திரி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னர் நாங்கள் எதிர்த்தோம் அதற்கு காரணம், ஒப்பந்தம் செய்து கொண்டுவந்த திருமதி பண்டாரநாயகா கட்டாய நாடுகடத்தல் நடைபெறும் என்ற வகையில் கருத்து வெளியிட்டதுதான். ஆனால் இந்திய தரப்பில் கட்டாய நாடுகடத்தல் பற்றி பேசப்படவேயில்லையென்று தெரிவிக்கப்பட்டது. இந்த மசோதாவில் மட்டாய நாடுகடத்தல் அம்சமே இல்லை, அதன் காரணமாகவே இதனை நாங்கள் இப்போது ஆதரிக்கின்றோம் என்றார்.

செனட்டர் ஒபயசேகரா பேசுகையில் ஜேஆர். ஜயவர்தன, எம். டி. பண்டா, ஹிருல்ல, சுகததாஸ ஆகிய நான்கு மந்திரிகள் மசோதா மீது வாக்களிக்கவில்லை என்பதை சுட்டிக் காட்டினார். செனட்டர் ஏ. பி. ஜயசூரியா பேசுகையில் இந்த மசோதாவில் நிறைய குறைபாடுகள் இருப்பதாகவும், இந்தக் குறைகளை இந்தியர் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றார்.

மசோதா நிறைவேறுவதற்கு ஒத்துழைப்பு தந்ததற்காக சபையின் இரு தரப்பினருக்கும் வர்த்தக மந்திரி எம். வி. பி. பீரிஸ் நன்றி தெரிவித்தார்.

## பசு பாதுகாப்பு ஊர்வலம

யாழ்ப்பாணம், செவ்

அகில இலங்கை சைவ அனுட்டானப் பாதுகாப்புச் சபையினர் பசுவின் மகிமையை உணர்த்தும்வகையில் நாளை காலை 7 மணியளவில் கீரிமலை நகுலேசுவரப் பெருமான் சந்நிதியிலிருந்து ஊர்வலமொன்றை நடாத்த ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளனர். இந்த ஊர்வலம் கீரிமலை-காங்கேசன் துறைச் சந்தி, யாழ்ப்பாண வீதி-மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம்-தெல்லிப்பழைச் சந்தி-தெல்லிப்பழை மகா மாரியம்மன் ஆலயம் ஆகிய இடங்களுக்கூடாகச் சென்று ஸ்ரீ துர்க்காதேவி அம்மன் சந்நிதியை அடையவிருக்கிறது.

## நல்லூர் பஜனைச்சபை

யாழ்ப்பாணம், செவ்

நல்லூர் பஜனைச் சபையினர் நயினாதீவு நாகபூஷணி அம்மன் உற்சவங்களாகிய சப்ரம், தேர், தீர்த்தம் ஆகிய மூன்று உற்சவங்களிலும் பஜனை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

## வழக்கமபரையில் இன்று

சுழிபுரம், செவ்வாய்

தொல்புரம் வழக்கம்பரை மகா மாரியம்மன் கோவிலில் இன்று இரவு8-30 மணிக்கு திருமந்திரம்அருளியதிருமூல நாயனார்' எனும் பொருள் பற்றி திரு. நடேசன் சிவசண்முகமூர்த்தியின் சங்கீத கதாப்பிரசங்கம் நடைபெறும்.

### வாடகைக்கு

மருதனமடம் சந்தியில் இருந்து உடுவிலுக்குச் செல்லும் வீதியில் 100 யாருக்குள், நீர், வெளிச்ச வசதிகளுடன் இரண்டு புதிய வீடுகள் வாடகைக்கு விடப்படும். தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: சி. சிவராமலிங்கம், ஆசிரியர், உடுவில். 2460

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜூன் மாதம் 20-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org